## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

அ.வ.எண். 736/2010 பி.வா.சா.2 நாச்சிமுத்து

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 23.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | 19-10-1982 | **பி.வா.சா.ஆ.8** | வரி விதிப்பு எண்.6 உடைய தொழில் வரி ரசீது | அசல் |
| 2 | 28-12-1983 | **பி.வா.சா.ஆ.9** | வரி விதிப்பு எண்.6 உடைய தொழில் வரி ரசீது | அசல் |
| 3 | 08-03-1985 | **பி.வா.சா.ஆ.10** | வரி விதிப்பு எண்.6 உடைய தொழில் வரி ரசீது | அசல் |
| 4 | 06-02-1986 | **பி.வா.சா.ஆ.11** | வரி விதிப்பு எண்.6 உடைய தொழில் வரி ரசீது | அசல் |
| 5 | 15-01-2010 | **பி.வா.சா.ஆ.12** | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 6 | 27-01-2010 | **பி.வா.சா.ஆ.13** | திருப்பப்பட்ட அஞ்சல் உறை | அசல் |
| 7 | 18-01-2010 | **பி.வா.சா.ஆ.14** | பதிவஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| 8 | 16-01-2010 | **பி.வா.சா.ஆ.15** | Certificate of posting ரசீது அதனுடன் கூடிய திருப்பப்பட்ட தபால் உறை | அசல் |
| 9 | 17-09-2025 | **பி.வா.சா.ஆ.16** | தாவா சொத்தின் புகைப்படங்கள் | அசல் |

**( 5 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 26-10-1981 தேதியிட்ட உறுதிமொழி பத்திரம் முறையான முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை என்றும் அந்த ஆவணம் குறித்து 5 ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் எவ்வித கட்சியும் செய்யப்படவில்லை என்றும் வாதி தரப்பில் ஆட்சேபணை**

செய்யப்பட்டது. ஆவணங்களை பரிசீலித்து மேற்படி ஆட்சேபணைகள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதனால் 26-10-1981 தேதியிட்ட உறுதிமொழி பத்திரம் குறியீடு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது )

( 02-11-1981 தேதியிட்ட நாளிதழ் பிரசுரம் வழக்கிற்கு தொடர்பற்றது என்றும் , எந்த நாளிதழ் குறிப்பு இல்லை என்றும் வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது .ஆவணங்களை பரிசீலித்து மேற்படி ஆட்சேபணைகள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதனால் 02-11-1981 தேதியிட்ட நாளிதழ் பிரசுரம் குறியீடு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது )

( 02-12-1986 தேதியிட்ட செயல் விளக்க நோட்டீஸ்வும் சங்க கடிதமும் , 11-11-1986 தேதியிட்ட மாவட்ட ஆட்சியர் உத்திரவும் , 10-12-1986 தேதியிட்ட அழைப்பிதழும் வழக்கிற்கு தொடர்பற்றது என வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது .ஆவணங்களை பரிசீலித்து மேற்படி ஆவணங்களில் வழக்கு சொத்து குறித்து குறிப்பிட்டு எந்தவித குறிப்பும் இல்லாததால் மேற்படி ஆட்சேபணைகள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதனால் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது )

(பி.வா.சா.ஆ. 8 முதல் பி.வா.சா.ஆ. 11 வரையிலான வரி ரசீதுகள் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்கு உரியவை என வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது.)

( பி.வா.சா.ஆ. 16 புகைப்படங்களுக்கு குறுந்தகடோ , இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65B சான்றோ இல்லை என வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது.)

ஒப்பம் /- ( மு.ச. ஸ்ரீநாத்)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி